# இயல் - 5

## ஆசாரக்கோவை

இ) குறுவினா.

1. எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது எது?

விடை: எந்த உயிருக்கும் செய்யக்கூடாதது துன்பம் ஆகும்.

2. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?

விடை: நாம் நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் வேண்டும்.

ஆ) சிறுவினா.

1. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

விடை: ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் பின்வருமாறு.

- ❖ பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்.
- ❖ பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்.
- ❖ இனிய சொற்களைப் பேசுதல்.
- ❖ எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்.
- ❖ கல்வி அறிவு பெறுதல்.
- ❖ எல்லோரையும் சமமாகப் பேணுதல்.
- ❖ அறிவுடையவராய் இருத்தல்.
- ❖ நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல்